2. அறிவிப்புகள்.

(அ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1981 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5 ஆம் நாளன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்துள்ள முடிவின் படி பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்:—

6–2–1981 (வெள்ளிக்கிழமை)	1980–81 ஆம் ஆண்டிற்கான துணை நிதி நிலை அறிக்கையின் மீது விவாதமும், வாக்கெடுப்பும் அதற்கான நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தலும்.
7–2–1981 (சனிக்கிழமை).	அரசு அலுவல்கள்.
8–2–1981 (ஞாயிற்றுக் கிழமை).	விடுமுறை.
9–2–1981 (திங்கட் கிழமை). 10–2–1981 (செவ்வாய்க் கிழமை). 11–2–1981 (புதன்கிழமை)	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம்.
12–2–1981 (வியாழக்கிழமை).	அரசு அலுவல்கள்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணிக்குக் கூடும்.

3. கவன ஈர்ப்புகள்.

(அ) தண்டராம்பட்டு தொகுதியில் நிலவும் கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "தண்டராம் பட்டு தொகுதியைச் சேர்ந்த தானிப்பாடி கிராமத்தில் நிலவும் கடுமையான குடி தண்ணீர்ப் பஞ்சம் பற்றி திரு. த. வேணு கோபால் அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவர் அவையில் இல்லாததால் அமைச்சர் அவர்கள் அவைமுன் அறிக்கையை வைக்கலாம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டம், தண்டராம்பட்டு தொகுதியைச் சார்ந்த தானிப்பாடி கிராமத்தில் ஒரு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டியும், தரை மட்டத் தொட்டியும் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. ஆதி திராவிடர் காலனியிலுள்ள ஓர் துளைக் கிணறும் நல்ல நிலையில் இயங்கி வருகிறது. மேலும் மூன்று துளை கிணறுகள் போடுவதற்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

2. மற்றும் வறட்சி நிவாரணப் பணியின்கீழ் வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளில் நிலவி வரும் குடி நீர் பஞ்சத்தைத் தீர்க்க அரசு ரூபாய் 115.00 இலட்சம் மதிப்பீட்டில் முறையே 500 மற்றும் 200 (ஆழ்) துளை கிணறுகள் தோண்ட அனுமதி அளித்துள்ளது. அதன்படி, திருவண்ணாமலைக் கோட்டத்தைச் சார்ந்த தண்டராம்பட்டு ஒன்றியத்தில் 16 துளைக் கிணறுகள் ரூபாய் 2,40,000 மதிப்பீட்டில் தோண்டப்படும்.

3. தேவையான அளவு குடி நீர் வசதி செய்ய நடவடிக்கைகள் யாவும் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

(ஆ) வீடு கட்டுவதற்கு வழங்கப்பெறும் கடன்.

திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, "ஏற்கெனவே வீடு கட்டுவதற்குக் கடன் வழங்க, ஆணை பிறப்பிக்கப்பட்ட அரசு ஊழியர்கட்கு இரண்டாவது தவணைக் கடன் வழங்குவதில் பிறப்பிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் ஒரு அறிக்கை வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

அரசு அலுவலர்களுக்கு வீடு கட்டுவதற்கான முன்பணம் வழங்கும் திட்டம் 1960 ஆம் ஆண்டு முதல் செயலாற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு நிதியாண்டிலும் இதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. 1978–79 ஆம் ஆண்டில் ரூ. 150 இலட்சமாக இருந்த ஒதுக்கீடு 1979–80-ல் 225 இலட்சமாகவும், நடப்பு